பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය - පරිපාලන
Office of the Deputy Chief Secretary - Administration

639/1, ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
639/1, ,නාවලර්පාර, යාපනය.
639/1, Navalar Road, Jaffna.


எனது இல / මගේ අංකය / My No: **NP/02/14/GN/38**

Date: **14.07.2017**

---

பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் சுற்றறிக்கை இல: NP/02/2017 (01)

கௌரவ ஆளுநரின் செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்,
அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்

**<u>இணைந்த சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றங்கள் - 2018</u>**

கௌரவ வடமாகாண ஆளுநர் அவர்களின் G/NPC/A11/PPAஆம் இலக்க 13.07.2017 ஆம் திகதிய அனுமதிக்கமையவும் வட மாகாண சபையின் வருடாந்த இடமாற்றக் கொள்கை தொடர்பாக 2009.03.25ம் திகதி வெளியிடப்பட்ட மாகாண பொது நிர்வாக சுற்றறிக்கை இல NP/02/2009(07) மற்றும் 1817/30 இலக்க 2013.07.03ம் திகதிய வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் அத்தியாயம் XVIII ஆகியவற்றின் ஏற்பாடுகளைத் தழுவியும் 2018ஆம் ஆண்டுக்கான இணைந்த சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**02.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணைந்த சேவைகள் தொடர்பில் வருடாந்த இடமாற்றங்கள் 2018.01.01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

1) முகாமைத்துவ உதவியாளர்
2) அபிவிருத்தி உத்தியோகத்தர்
3) தொழில்நுட்ப உத்தியோகத்தர்
4) கணினித் தரவுப் பதியுநர் (ஆளணி அனுமதிக்கப்பட்ட திணைக்களங்களுக்கு இடையில்)
5) சாரதிகள்
6) அலுவலகப் பணியாளர்

**03.** இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கீழ்குறிப்பிடும் மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்க தயாரிக்கப்படும் இடமாற்றத்திற்கான விண்ணப்பமானது திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1) இடமாற்றம் எதிர்பார்க்கும் அலுவலர்களால் நிரப்பப்படும் விண்ணப்பப் படிவம்
**(பின்னிணைப்பு I - Form/02/Tr/01/2018)**
2) இடமாற்றம் பெறவிரும்பாத அலுவலர்களால் நிரப்பப்படும் விண்ணப்பப் படிவம்
**(பின்னிணைப்பு II - Form/02/Tr/02/2018)**
3) வருடாந்த இடமாற்றங்களைக் கோரும் அலுவலர்களின் விண்ணப்பப் படிவத்தின் அட்டவணை
**(பின்னிணைப்பு III - Form/02/Tr/03/2018)**
4) வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்காத அலுவலர்களின் விண்ணப்ப அட்டவணை
**(பின்னிணைப்பு IV - Form/02/Tr/04/2018)**

…..02


பிரதமசெயலாளர் / ප්‍රධානලේකම් / Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
e-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப்பிரதமசெயலாளர் / නියෝජ්‍යප්‍රධානලේකම් / Deputy Chief Secretary
Tel : 021 320 2571 (Dir)
: 021 222 0960, 021 222 4761, 021 222 4762 (Gen)
Fax : 021 222 0950
e-mail :ppas.np@gmail.com

5) தங்கள் திணைக்களத்தில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தைக் கொண்டுள்ள இடமாற்றங்களுக்காக விண்ணப்பிக்காத அனைத்து அலுவலர்கள் தொடர்பான அட்டவணை
**(பின்னிணைப்பு V - Form/02/Tr/05/2018)**

**04.** இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களின் 2017ஆம் ஆண்டுக்கு இடமாற்றக் கட்டளையின் மூலம் இடமாற்றம் வழங்கப்பட்டு 2018.01.01 வரை இடமாற்றம் பிற்போடப்பட்டவர்கள் புதிய நிலையத்தில் 2018.01.01ஆம் திகதி கடமையைப் பொறுப்பேற்க விடுவிக்கப்பட வேண்டும். இவ்வாறானாவர்களின் இடமாற்றங்களும் கருத்திற்கொள்ளப்பட்டே 2018ம் ஆண்டுக்கான இடமாற்றப்பட்டியல் தயாரிக்கப்படும்.

**05.** வருடாந்த இடமாற்ற கட்டளையை பெற்ற எல்லா உத்தியோகத்தர்களும் உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமைக்காக அறிக்கையிடும் பொறுப்பை கொண்டுள்ளனர். எனவே இடமாற்றத்திற்குத் தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் கடமைகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் உரிய திகதியில் புதிய சேவை நிலையங்களில் கடமையைப் பொறுப்பேற்க அவர்களை விடுவிக்கவும் திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**06.** இவ் இணைந்த சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக தங்களது அமைச்சின் /திணைக்களத்தின் மற்றும் அவற்றின் கீழ்வரும் அலுவலகங்களிலும் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களும் அறியத்தருவதுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அட்டவணைப்படுத்தி விண்ணப்பங்களுடன் பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அலுவலகத்திற்கு **2017.08.15**ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறிப்பு: தங்களால் முன்னளிக்கப்படும் இணைந்த சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்ற விண்ணப்பங்களுக்குரிய அட்டவணைகள் **கடமையாற்றிய கூடிய சேவைக்கால முதுமுறை ஒழுங்கில் பட்டியலிடப்பட்டு** சமர்ப்பிக்கப்படுவதுடன், அதன் மென்பிரதி எமது மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கப்படுதல் (ppas.np@gmail.com) வேண்டும்.

*ச.மோகநாதன்*
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்
பிரதம செயலாளருக்காக

பிரதமசெயலாளர்
ප්‍රධානලේකම්
Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
e-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப்பிரதமசெயலாளர்
නියෝජ්‍යප්‍රධානලේකම්
Deputy Chief Secretary
Tel : 021 320 2571 (Dir)
: 021 222 0960, 021 222 4761, 021 222 4762 (Ger
Fax : 021 222 0950
e-mail :ppas.np@gmail.com